**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 122** **நாள்: 06.06.2025**

**பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் கட்டுமானம் மற்றும் இடிபாட்டுக் கழிவுகள் மேலாண்மை, சுத்தமான மற்றும் பாதுகாப்பான கட்டுமானம் குறித்த புதிய வழிகாட்டு நெறிமுறைகள் தொடர்பாக அலுவலர்களுக்கான பயிற்சியினை மாண்புமிகு மேயர் திருமதி ஆர். பிரியா அவர்கள் இன்று ரிப்பன் கட்டட வளாகக் கூட்டரங்கில் தொடங்கி வைத்தார்.**

பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் கட்டுமானம் மற்றும் இடிபாட்டுக் கழிவுகள் மேலாண்மை, சுத்தமான மற்றும் பாதுகாப்பான கட்டுமானம் குறித்த புதிய வழிகாட்டு நெறிமுறைகள் தொடர்பாக அலுவலர்களுக்கான பயிற்சியினை மாண்புமிகு மேயர் திருமதி ஆர். பிரியா அவர்கள் இன்று (06.06.2025) ரிப்பன் கட்டட வளாகக் கூட்டரங்கில் தொடங்கி வைத்தார்.

இதனைத் தொடர்ந்து, மாண்புமிகு மேயர் அவர்கள் உலக சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு, நெகிழிப் பயன்பாட்டினைத் தவிர்த்தல் குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையிலான கலைநிகழ்ச்சிகளை ரிப்பன் கட்டட வளாகம் முன்பகுதியில் தொடங்கி வைத்துப் பார்வையிட்டார்.

பின்னர், பொதுமக்களுக்கு நெகிழிப் பயன்பாட்டினைத் தவிர்த்தல் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் கலைநிகழ்ச்சிகளுக்கான வாகனத்தினை கொடியசைத்துத் தொடங்கி வைத்து, மேலும், பொதுமக்களுக்கு விழிப்புணர்வினை ஏற்படுத்தும் துண்டுப்பிரசுரங்களை வெளியிட்டார்.

**பின்னர் மாண்புமிகு மேயர் அவர்கள் செய்தியாளர்கள் சந்திப்பில் தெரிவித்ததாவது**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, பெருநகர சென்னை மாநகராட்சியில் பல்வேறு திட்டப்பணிகள் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நேற்று உலக சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு, தமிழ்நாடு முழுவதும் உள்ள அனைத்து அரசு அலுவலகங்களிலும் தூய்மைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டது. பெருநகர சென்னை மாநகராட்சி ரிப்பன் கட்டட வளாகத்தில் உள்ள அலுவலகங்களிலும் தூய்மைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டது.

மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் நேற்று ரிப்பன் கட்டடத்திற்கு வருகை தந்து இந்தப் பணிகளை ஆய்வு மேற்கொண்டு, காணொலிக் காட்சி வாயிலாக அனைத்து அரசு அலுவலகங்களிலும் மேற்கொள்ளப்பட்ட தூய்மைப் பணிகள் குறித்து சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்களிடம் கேட்டறிந்தார்கள்.

பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் மக்கும் மக்காத குப்பைகளைப் பிரித்து வழங்குவது குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

மேலும், மாநகராட்சிப் பகுதிகளில் கட்டடம் மற்றும் இடிபாட்டுக் கழிவுகள் அகற்றும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதற்காக சுத்தமான மற்றும் பாதுகாப்பான கட்டுமானம், கட்டடி மற்றும் இடிபாட்டுக் கழிவுகள் மேலாண்மை என்ற இரண்டு புதிய வழிகாட்டு நெறிமுறைகள் வெளியிடப்பட்டுள்ளது. இந்த வழிகாட்டு நெறிமுறைகள் 21.05.2025 மற்றும் 21.04.2025 அன்று நடைமுறைபடுத்தப்பட்டது. இந்த வழிகாட்டு நெறிமுறைகள் குறித்து மாநகராட்சி பொறியாளர்களுக்கு இன்று பயிற்சி வழங்கப்படுகிறது.

சுத்தமான மற்றும் பாதுகாப்பான கட்டுமானத்திற்கான வழிகாட்டுதல்கள் மூன்று வகைகளாக பிரிக்கப்பட்டுள்ளது. அதிக முக்கியத்துவம், நடுத்தர முக்கியத்துவம் மற்றும் குறைந்த முக்கியத்துவம்

- ஒரு ஏக்கருக்குள் கட்டுமானம் மேற்கொள்ளும்போது, 6 மீட்டர் உயரத்திலும், அதற்கு மேல் என்றால், 10 மீட்டர் உயரத்தில் உலோகத்தால் தடுப்பு அமைக்க வேண்டும்.
- கட்டட இடிபாடுகளால் தூசி பரவுவதை தடுக்க அடர்த்தியான துணி, தார்பாய் இரட்டை அடுக்கு பச்சை வலையால் மூட வேண்டும். தூசி பரவாமல் தண்ணீர் தெளிக்க வேண்டும்.
- கட்டுமான இடிபாடுகளை மாநகராட்சி வழிகாட்டுதலின்படி, அதற்காக ஒதுக்கப்பட்ட இடத்தில் கொட்ட வேண்டும். நடைபாதை, சாலையோரம் கொட்டக் கூடாது.
- இடிபாடுகளை வாகனங்களில் கொண்டு செல்லும் போது, தார்பாயினால் மூடி கொண்டு செல்ல வேண்டும். வாகனங்களுக்கு மாசுக் கட்டுப்பாட்டு வாரிய சான்று அவசியம்.
- கட்டுமானப் பணி இடங்களில் கண்காணிப்பு கேமரா பொருத்த வேண்டும.
- கட்டடத்தின் உயரம் 18.5 மீட்டருக்கு மேல் இருந்தால், சென்சார் அடிப்படையில் காற்று மாசை கண்டறியும் கருவி பயன்படுத்த வேண்டும்.
- கட்டட இடிபாட்டுப் பணிகள் முடிவுற்றவுடன் உடனுக்குடன் கட்டட இடிபாட்டுக் கழிவுகள் மேலாண்மை வழிக்காட்டுதலின்படி அகற்றிட வேண்டும்.

மாநகராட்சியின் சார்பில் வகுக்கப்பட்டுள்ள சுத்தமான மற்றும் பாதுகாப்பான வழிகாட்டுதல்களை மீறுபவர்கள் மீது அபராதம் விதிக்கப்படும்.

- அதிக முக்கியத்துவம் வாய்ந்த வழிகாட்டுதல்களை மீறினால், 20 ஆயிரம் சதுர மீட்டர் பரப்பளவிற்கு கட்டட கட்டுபவர்களுக்கு ரூ.5 லட்சமும், 500 ச.மீட்டர் முதல் 20 ஆயிரம் ச.மீட்டர் பரப்பளவிற்கு கட்டட கட்டுபவர்களுக்கு ரூ.25 ஆயிரம் வரை அபராதமும், 300 ச.மீட்டர் முதல் 500 ச.மீட்டர் பரப்பளவிற்கு கட்டட கட்டுபவர்களுக்கு ரூ.10 ஆயிரம் அபராதமும் விதிக்கப்படும்.

- நடுத்தர/குறைந்த முக்கியத்துவம் வாய்ந்த வழிகாட்டுதல்களை மீறினால், 20 ஆயிரம் சதுர மீட்டர் பரப்பளவிற்கு கட்டட கட்டுபவர்களுக்கு ரூ.1 லட்சமும், 500 ச.மீட்டர் முதல் 20 ஆயிரம் ச.மீட்டர் பரப்பளவிற்கு கட்டட கட்டுபவர்களுக்கு ரூ.10 ஆயிரம் வரை அபராதமும், 300 ச.மீட்டர் முதல் 500 ச.மீட்டர் பரப்பளவிற்கு கட்டட கட்டுபவர்களுக்கு ரூ.1000 அபராதமும் விதிக்கப்படும்.

  இவ்வாறு அதிக/நடுத்தர/குறைந்த முக்கியத்துவம் வாய்ந்த வழிகாட்டுதல்களில் விதி மீறல்கள் ஏற்பட்டால், மீறல்களை சரிசெய்வதற்கான எச்சரிக்கை அறிவிப்பு வழங்கப்பட்டு அதை சரி செய்வதற்கு 15 நாட்கள் அவகாசம் அளிக்கப்படும். 15 நாட்களுக்கு பிறகும் சரிசெய்யாவிட்டால் மட்டுமே பரப்பளவிற்கு ஏற்றவாறு அபராதம் விதிக்கப்படும். அதன் பிறகு 7 நாட்கள் அவகாசம் அளிக்கப்பட்டு அதன் பிறகும் சரிசெய்யாவிட்டால் கட்டுமான நடவடிக்கைகள் நிறுத்த உத்தரவு பிறப்பிக்கப்படும்.

கட்டுமானம் மற்றும் இடிபாட்டுக் கழிவு மேலாண்மை வழிகாட்டுதல்கள், ஒரு மெட்ரிக் டன் வரை கட்டட கழிவுகள் உருவாக்குபவர்கள் நம்ம சென்னை செயலி மற்றும் 1913 தெரிவித்தால் மாநகராட்சியே இலவசமாக அகற்றும்.

- சிறிய அளவில் கழிவுகள் உருவாக்குபவர்கள் தங்கள் கழிவுகளை பெருநகர சென்னை மாநகராட்சியின் செயலாக்க மையத்திற்கு கொண்டு செல்லவும், அதற்கு ஒரு டன்னிற்கு ரூ.800/- செயலாக்க கட்டணம் செலுத்த வேண்டும்.
- பெருமளவு கழிவுகள் உருவாக்குபவர்கள் கட்டட இடிபாட்டு கழிவுகளை முறையற்ற வகையில் மழைநீர் வடிகால், தெருக்கள், திறந்த வெளி மற்றும் பொது மக்கள் பயன்பாட்டுப் பகுதிகளில் கொட்டுபவர்களுக்கு ஒரு மெட்ரிக் டன்னிற்கு ரூ.5000/-ம், சிறிய அளவில் கழிவுகள் உருவாக்குவோர் மற்றும் சேவை வழங்குநர்களுக்கு முறையற்ற வகையில் கழிவுகளை கொட்டினால் ஒரு மெட்ரிக் டன்னிற்கு ரூ.3000/-ம் அபராதமாக விதிக்கப்படும்.

இந்நிகழ்ச்சியில், மதிப்பிற்குரிய துணை மேயர் திரு.மு.மகேஷ்குமார், கூடுதல் ஆணையாளர் (சுகாதாரம்) திரு.வி.ஜெயசந்திர பானு ரெட்டி, இ.ஆ.ப., துணை ஆணையாளர்கள் திரு.வி.சிவகிருஷ்ணமூர்த்தி, இ.ஆ.ப., (பணிகள்), திரு.எம்.பி.அமித், இ.ஆ.ப., (தெற்கு வட்டாரம்), திரு.கட்டா ரவி தேஜா, இ.ஆ.ப., (வடக்கு வட்டாரம்), மாமன்ற ஆளுங்கட்சித் தலைவர் திரு.ந.இராமலிங்கம், நிலைக்குழுத் தலைவர் (பொதுசுகாதாரம்) டாக்டர் கோ. சாந்தகுமாரி, தலைமைப் பொறியாளர் (திடக்கழிவு மேலாண்மை) திரு.கே.விஜயகுமார், மேற்பார்வைப் பொறியாளர் (மழைநீர் வடிகால்) திரு.ஏ.எஸ்.முருகன் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

பெருநகர சென்னை மாநகராட்சி